மலர் - 2 இதழ் - 8

ஐப்பசி - 1991

# மக்கள் மன்றம்



# தாயகம் திரும்பியோர் மாநில மாநாடு

தமிழகத்தில் எத்தனை ஏமாற்றங்கள்! தமிழகம் எங்கள் தாயகம் என்று எண்ணித்தான் ஐந்து லட்சம் இந்தியத்தமிழ் சகோதரர்கள் ஆவலையும், ஆசையையும் அள்ளி அரவணைத்துக் கொண்டு, விரட்டி அடித்த இலங்கையை நொந்துகொண்டு, தமிழ் மண்ணிலாவது நீதியையும், நேர்மையையும், சமத்துவத்தையும் பெற்றுவிடமாட்டோமா என்ற அங்கலாய்ப்போடு வந்தார்கள். ஆனால், நாம் கடந்து வந்த உப்புக்கடலாய்க் கரித்தது இங்கு சந்தித்த உறவுகளும், சுவைத்த உணர்வுகளும்.

'அகதிகள்' என்ற அன்புப் பெயர் சூட்டினார்கள் நமது தமிழ் சகோதரர்கள்; அரசாங்க அதிகாரிகள்; பத்திரிகை எழுத்தாளர்கள். நாம் அகதிகள் இல்லை, இந்தியக் குடிமக்கள் என்று எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் எவர் காதிலாவது விழுந்ததாகத் தெரியவில்லை. இருபது ஆண்டுகளாக இன்னும் அகதிப்பாட்டுத்தான் பாடிக்கொண்டிருக்கிறார்கள். போதாக்குறைக்கு,

1983ம் ஆண்டுக்குப் பின்னர் உண்மையாகவே தமிழகத்தில் தஞ்சம் புகுந்த வடகிழக்கு இலங்கைத் தமிழகதிகளைக் கண்ட பின்னர் முன்னரே விளக்கமற்றிருந்தவர்கள் மேலும் குழப்பமடைந்தார்கள். வெளிநாட்டில் இருந்து வந்த அத்தனை பேரும் அகதிகளே என்பது இவர்களின் அரசியல் அகராதி.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உன்னதத் தமிழ்க் கோட்பாடெல்லாம் மேடை முழக்கத்திற்கு மட்டுந்தான்.

ஆனால் உண்மையில்,

**நீலகிரீயில் எம்மைக் கிள்ளுக் கீரை என்று நினைத்துக் கொண்டு நீசச் செயல்களில் ஈடுபடுவோரின் ஈனத்தனத்திற்கு முடிவு கட்டவேண்டும். தமிழகம் முழுவதும் பரந்து வாழும் தாயகம் திரும்பியோரின் உரிமைப் பாதுகாப்பிற்கு அரணாக ஒரு பேரியக்கம் கட்டி எழுப்பப்பட வேண்டும்.**

தாயகம் திரும்பிய தமிழன் அந்நியனாக்கப் படுகின்றான். அவர்கள் குடியேறும் இடத்திற்கு பெயர் 'சிலோன் காலனி'. சிலோனும் செத்து, காலனியும் செத்த பின்னரும் தமிழக மேதைகளின் பரிபாஷையில் இன்னும் சிலோன்காலனிகள் இருக்கின்றன. நீலகிரி மாவட்டம் தமிழகத்தின் மாவட்டங்களில் ஒன்று. அங்கு தமிழனை குடியேற விடாதே என்று கோஷமிடும் இரண்டு மூன்று படுக வகுப்புவாத சங்கங்கள். அந்த சங்கங்களுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் தமிழக அரசியல் கட்சிகள் ஆதரவு காட்டுகின்றன. இதைவிட வெட்கக்கேடு வேண்டுமென்றால், இல்லாமலில்லை.

தாயகம் திரும்பியவர்களை நீலகிரியில் இருந்து விரட்டி விடுவேன் என்று கொக்கரிக்கும் ஒரு கலெக்டர். தாயகம் திரும்பியவர்கள் இலங்கைத் தமிழர்கள், அவர்கள் பதிவு செய்ய வேண்டுமென்று பைத்தியக்காரத் தனமாக உத்தரவிடும் ஒரு அதிகாரி. அதனைச் செயற்படுத்தும் போலீஸ்காரர்கள். அறிவுகெட்டதனமாக மக்களை அச்சுறுத்தி அல்லற்படுத்தும் அதிகார வர்க்கத்திற்கு தமிழகத்தில் தானே ஏராளமான உதாரணங்கள் இருக்க வேண்டும்.

தமிழனை இழிவு படுத்துவதற்கென்றே பொய்மை அரசியலைப் புகுத்தி இனவாதம் கக்கும் படுக சங்கங்களை உடனடியாக

தொடர்ச்சி 2ம் பக்கம் ...

## மாநில மாநாட்டுச் சிறப்பிதழ்

## மாநில மாநாடு

1ம் பக்க தொடர்ச்சி

அடக்கத்தெரியாத ஒரு ஆட்சியாளர் அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகம் செய்ததைக் கண்டித்த சமூகத் தொண்டர்களை பொய்க்குற்றம் சுமத்தி சிறைப்படுத்துகின்ற காட்டுமிராண்டித் தனத்தை இந்தத் தமிழகம் சகித்துக் கொண்டு தானே இருக்கிறது?.

இலங்கைத் தமிழர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அரசு பிறப்பித்த ஆணையைச் சரியாகப் புரிந்து கொள்ளாத ஆட்சியாளர்களும், காவல் துறையினரும் ஏறக்குறைய இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தாயகம் திரும்பியோரை சிறைப்படுத்தியும், தடுப்புக்காவலில் வைத்தும் கொடுமைப்படுத்தி உள்ளார்கள். சிலர் 60 நாட்கள் வரை போலீஸ் கட்டுப்பாட்டுக்கும் கண்காணிப்புக்கும் ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள். அப்பாவி மக்கள் மீது மனித வேட்டையே ஆடிமுடித்திருக்கிறார்கள்.

இதைக் கண்டு தாயகம் திரும்பிய மக்கள் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளார்கள். அவர்கள் வாழ்வை பறித்ததே இலங்கைஇந்திய அரசுகளின் நாடு கடத்தும் ஒப்பந்தம் தான். இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் மீண்டும் அவமானப்படுத்தப் பட்டிருப்பதும் அல்லற்படுத்த பட்டிருப்பதும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு சமம்.

இவர்களது அவலக் குரல் கேட்டு இலங்கை அமைச்சர் திரு. தொண்டமான் அவர்கள்பாரதப் பிரதமரைச் சந்தித்து மறுவாழ்வு இன்றி அல்லற்படும் தாயகம் திரும்பியோருக்கு நல்வாழ்வு வழங்குமாறு வற்புறுத்தி இருக்கிறார்கள். பாரதப் பிரதமரும் தாயகம் திரும்பியோரது மறுவாழ்வு பிரச்சினையை மீளாய்வு செய்வதாக ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

இந்தத் தருணத்தில் தாயகம் திரும்பிய மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தமது வாழ்வு மலர தமது சக்தியை ஒருமுகப் படுத்த வேண்டும். தமிழக மண்ணில் நமது உரிமையை நிலைநாட்ட வேண்டும். அஞ்சி, அஞ்சி வாழும் வாழ்க்கை இல்லா தொழிய வேண்டும். இமயம் முதல் குமரிவரை இந்தியன் என்ற அடிப்படையில் எமக்கு எல்லா உரிமைகளும் உண்டென முழங்க வேண்டும். கேவலம் நீலகிரியில் எம்மைக் கிள்ளுக் கீரை என்று நினைத்துக் கொண்டு நீசச் செயல்களில் ஈடுபடுவோரின் ஈனத்தனத்திற்கு முடிவு கட்ட வேண்டும். தமிழகம் முழுவதும் பரந்து வாழும் தாயகம் திரும்பியோரின் உரிமைப் பாதுகாப்பிற்கு அரணாக ஒரு பேரியக்கம்கட்டி எழுப்பப்பட வேண்டும்.

இதற்கு முன்னோடியாக டிசம்பர் 6,7ல் சென்னையில் தாயகம் திரும்பியோரின் மாநில மாநாடு நடைபெற விருக்கிறது. டெக்ராஸ் நிறுவனமும், மலையக மக்கள் மறுவாழ்வு மன்றமும் ஒருங்கிணைந்து இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

இம்மாநாட்டில் தாயகம் திரும்பியோரது சங்கங்கள் அனைத்தும் பங்கு பற்றுகின்றன. இம்மாநாட்டில் அதிமுக்கியமான தீர்மானங்கள் கொண்டுவரப்பட உள்ளன. இம்மாநாடு வெற்றிகரமாக நடந்தேற அனைவரும் ஒத்துழைக்க இம்மாநாடு தாயகம் திரும்பியோரது உரிமை முழக்க மாநாடாக வெற்றிமுரசு கொட்ட வாழ்த்துகிறோம். ✱

---

## தொழிற்சங்கத் தலைவர் சங்கர் குஹா நியோகி நடுநிசிப் படுகொலை

மத்தியப் பிரதேசத்தின் சத்திஸ்கார் பகுதியில் உள்ள தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பணியாற்றி வந்த சதிஷ்கார் சுரங்கத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. சங்கர் குஹா நியோகி செப்டம்பர் 28 அதிகாலை முதலாளிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்ட சில சதிகாரர்களினால் படுகொலை செய்யப்பட்டார்.

இப்பிராந்தியத்தின் சக்தி வாய்ந்த தொழிற்சங்கத் தலைவராயிருந்த இவர், இப்பகுதியில் மிகமோசமாக ஒடுக்கப்பட்ட தொழிலாளர்களின் தொழில் பிரச்சினைகளின் மட்டுமே கவனம் செலுத்தவில்லை. அவர்களின் சுகாதாரம், கல்வி, பெண்களின் அந்தஸ்து ஆகியவை குறித்தும் பாடுபட்டார். 'சத்திஸ்கார் மகிளா முக்தி மோர்ச்சா' என்ற பெண்கள் அமைப்பை ஏற்படுத்தி மதுக்கடைகளை மறியல் செய்தார். ஜாதிய ஒடுக்கு முறை, லஞ்சம் என்பவற்றுக்கு எதிராக பலத்த குரல் கொடுத்தார்.

இவரது நடவடிக்கைகளினால் இப்பகுதியிலிருந்த ஆலை முதலாளிகளுக்கும், தொழிலாளர் ஒப்பந்த ஏஜெண்டுகளுக்கும், மது உற்பத்தியாளர்களுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். இதன் விளைவாகவே இவர் கொல்லப்பட்டார்.

தொழிலாளர் உரிமைக்காகப் பல தடவை சிறை சென்றுள்ள இவர், கொல்லப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்புதான் சிறையிலிருந்து விடுதலை ஆனார். இவருக்குப் பல தடவை கொலை மிரட்டல் வந்திருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தும் கூட இப்படுகொலை நடைபெற்றுள்ளது. இக்கொலை ''ஒரு தனி மனிதக் கொலையல்ல; ஓர் அமைப்பின் மீதே தொடுக்கப்பட்ட தாக்குதல்''.

எப்போதுமே மக்கள் விரோத சக்திகள் மீது விழிப்புணர்வைக் கொண்டிருந்த இந்த மாமனிதரைத் தூக்கத்தில் கொன்ற அந்த நல்லிரவுக் கொலைக்காரர்களைக் கண்டித்து, அக்டோபர் 13ம் தேதி ஒரு லட்சம் மக்கள் மாபெரும் பேரணி நடத்தினர். நீதி கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று சத்திஸ்கார் முக்தி மோர்ச்சா சூளுரைத்துள்ளது.

# 'சத்தியம் என்ற ஆயுதம் நம்மிடம் உள்ளது'

## - காந்தி ஜெயந்தி விழாவில் மன்றத் தலைவர் பேச்சு -

காந்தி ஜெயந்தி மற்றும் சமூகநீதி நாள் கோத்தகிரி மன்ற மண்டபத்தில் 6-10-91 அன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய மன்றத் தலைவர் திரு. திருச்செந்தூரன், ''தூங்கிக்கிடந்தவரையும் தட்டி எழுப்பியவர் காந்தி. அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்றவன்தான் சுதந்திரமாக சிந்திக்க முடியும். அதற்கு அவர் காட்டிய வழிதான் 'சத்திய மேவ ஜெயதே-வாய்மையே வெல்லும், இன்று சத்தியத்துக்கு ஒரு சோதனையான நிலை. உண்மையான நாட்டுப்பற்றுக் கொண்டுள்ள நமக்கு இன்று சோதனை ஏற்படுகிறது. இது சத்திய சோதனை. ஆனாலும் சத்தியம் என்ற ஆயுதம் நம்மிடம் உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கோத்தகண்டி ராமலிங்கம், இத்தலார் ரவி, பேத்தியாடா சகாதேவன் ஆகியோர் திருவிளக்கு ஏற்றிவைக்க, நிர்வாக சபை உறுப்பினர் திருமதி கல்யாணி அம்மாள் காந்தியடிகள் உருவப் படத்துக்கு மாலை அணிவித்தார்.

விழாவில் சிறப்புரையாற்றிய துணைத்தலைவர் திரு. ஏ.சி. டீன் பேசுகையில், ''போராடுகிறவருக்குத் தான் காந்தியைக் கொண்டாடும் உரிமை இருக்கிறது. ஆனால், காந்தியைக் கொண்டாடுவதாகக் கூறிக் கொள்ளும் ஆட்சியாளர்கள், நமது உரிமைப்போட்டங்களை ஒடுக்கிவிடப் பார்க்கிறார்கள். எங்களை சிறைக்கு அனுப்புவதன் மூலம் சிந்தனையைச் சிறையிட முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. எங்களின் உரிமை போராட்டம் தொடரும்'' என்று சூளுரைத்தார்.

மன்றத் துணைப்பொதுச் செயலர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா பேசுகையில், ''காந்தி காட்டிய வழியில் போராடிய மன்றத் தோழர்கள் சிறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். பொதுச் செயலரின் செய்தி ஒன்றையும். அவர் வாசித்தார்.

குன்னூர் கிளை உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் மலையக மாதர் முன்னணிச் செயலர் செல்வி வியாகுல மேரி, கூடலூர் இளைஞர் அணிச் செயலர் திரு. சக்திவேல், தொண்டரணித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம், அழகர் மலைக் காலனி மன்றத் தலைவர் திரு. ஜெயகனேஷ், கோவை நலிந்தோர் நல மைய ஆய்வு உதவியாளர் திரு. அன்பழகன் ஆகியோரும் பேசினர். கோத்தகிரி தாலுகா கமிட்டித் துணைச் செயலர் திரு, பரமநாதன் நன்றி உரை கூறினார்.

விழாவில் ஆண்கள், பெண்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். விழா முடிவில் மன்றக் கலைக் குழுவின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

# புலி வேட்டை: மலிவு விலை மனித உயிர்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் விடுதலை புலிகளின் மீதான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இதன் காரணமாக அப்பாவி அகதிகளும், தாயகம் திரும்பிய இந்தியர்களும் பல இடங்களில் காவல் துறையினரால் வேட்டையாடப்பட்டனர். புலி வேட்டையின் பெயரில் காவல் துறையினர் நடத்திய இந்த மனித வேட்டை ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, குன்னூரில் காட்டுப் புலி ஒன்றும் மனித வேட்டை ஆடிக்கொண்டிருந்தது.

குன்னூர் காட்டேரி, சேலாஸ், கரும்பாலம் போன்ற பகுதிகளில் இப்புலி தனது கோரப்பசிக்கு மனிதர்களை இரையாக்கிக் கொண்டிருந்தது. அன்றாடம் உழைத்து வயிற்றுப் பசியைப் போக்கிக் கொண்டு வாழும் ஏழைத் தோட்டத் தொழிலாளர்களே இவ்வாறு பலியாகியவர்கள். கடைசியாகப் பலியானவர் கரும்பாலத்தைச் சேர்ந்த ஒரு பெண் தொழிலாளி.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான அப்பெண் மாலையில் வேலைமுடிந்து திரும்பி வருகையில் புலித் தாக்குதலுக்கு இரையானார். கூடவந்த பெண்கள் அலற, அப்பெண்ணை கடித்துக் குதறி ரத்தம் சொட்டச் சொட்ட இழுத்துச் சென்றது அப்புலி.

இச்செய்தியால் தோட்டத் தொழிலாளர்கள் பீதியும் பயமும் அடைந்தார்கள். காவல்துறை, கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளுக்குத் தகவல் தரப்பட்டது. அரசுயந்திரம் எப்போதும் போல் ஆமை வேகத்தில் இயங்கியது. இரு தினங்களின் பின் காட்டில் அம்பெண்ணின் சின்னபின்னமாக்கப்பட்ட உடற்பகுதிகள் கிடைத்தன

ஒருவாரகாலமாக இப்புலி மனிதர்களைத் துன்புறுத்தி வந்திருந்தும் கூட அதிகாரிகள் அலட்சியமாக இருந்துள்ளார்கள். இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், இம்மாவட்ட உயர் அதிகாரி ஒருவரின் ஆணவம் நிறைந்த பேச்சு.

காட்டு விலங்கினால் ஏழைகள் இப்படி அநியாயமாகப் பலியாகிறார்களே, அதனை சுட்டுக் கொள்ள வேண்டும் என்று காவல் துறை அதிகாரி ஒருவர் மாவட்ட உயர் அதிகாரியிடம் அனுமதி கேட்டிருக்கிறார். அதற்கு அந்த உயரதிகாரி கூறிய பதில் என்ன தெரியுமா? ''மனிதன் செத்தால் 10,000/- மட்டுமே நஷ்டம், ஆனால் ஒரு காட்டுப்புலி செத்தால்பல லட்சங்கள் நஷ்டம். எனவே இதைப் பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை''.

புலியினும் கொடிய இந்தப் புன்மதியாளர்களை வைத்துக் கொண்டு நாட்டில் நல்லாட்சி புரிவது எப்படியோ?.

**- மலைமதி -**

# உதகையில் மன்றக் கிளைகள்

ஒடுக்கு முறைப் புயல்கள் எத்தனை வீசினாலும் அசைந்து கொடுக்காத ஆலமரம் தான் மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் என்பதை உதகைப் பகுதிகளில் மன்றத்துக்கு கிடைத்து வரும் அமோக ஆதரவு நிரூபித்து வருகின்றது. உதகைப் பகுதிகளில் மன்றக் கிளைகள் அமைக்கும் பணிகளில் கோத்தகிரி தாலுகா கமிட்டித் துணைச் செயலாளர் திரு. பரமநாதன் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். அவரோடு கலைக்குழுத் தலைவர் திரு. அரசன், மலையக மாதர் முன்னணித் தலைவர் திருமதி. சுந்தராம்பாள் மற்றும் பணியாளர்கள் முழுமையாக ஒத்துழைத்து வருகின்றனர்.

✱ 1-9-91. அன்று ஆல்காடு வீஸில் மன்றக் கிளை அமைக்கப்பட்டது. பின் வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. எம். மகாலிங்கம் |
| துணைத்தலைவர் | : | '' கே. செல்லையா |
| செயலாளர் | : | '' கே. ராமகிருஸ்ணன் |
| துணைச் செயலாளர் | : | '' எம். ராதாகிருஷ்ணன் |
| பொருளாளர் | : | '' எம். ஆறுமுகம். |

திருவாளர்கள் நித்தியானந்தம், வேலு, ஆறுமுகம் சந்திரகுமார், பெரியசாமி, இராஜேந்திரன், கருப்பையா ஆகிய எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டவர்களை வாழ்த்திப் பேசிய திரு. பரமநாதன் அண்மையில் மன்ற நிர்வாகிகள் மீது நீலகிரி மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட அடக்குமுறைகளை விவரித்து, ''அடக்கு முறைகளைக் கண்டு மன்றம் அஞ்சிவிடாது'' என்று சூளுரைத்தார். கிளைத் தலைவர் திரு. மகாலிங்கம் நன்றி தெரிவித்தார்.

✱ தலகுந்தா அழகர் மலைக் காலனியில் 24-9-91 அன்று மன்றக்கிளை அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு மன்றத்தலைவர் திரு. திருச்செந்தூரன் தலைமை வகித்தார். அவர் தனதுரையில் ''தாயகம் திரும்பியோர் இன்று அரசியல் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்காக குரல் கொடுக்க மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தைத் தவிர, வேறு எந்த அமைப்பும் இல்லை. என்னதான் இடுக்கண் வந்தாலும் நலிந்தோருக்கும் நசுக்கப்பட்டோருக்கும் சேவை புரிவதில் இருந்து மன்றம் பின்வாங்காது'' என்று உறுதிபடக் கூறினார். பெருந்திரளாகக் கூடியிருந்த ஊர் மக்களின் சார்பாக திரு. முனியாண்டி, திரு. ராமசாமி ஆகியோர் உரையாற்றினர்.

✱ கோத்தகண்டி வ. உ. சி. நகர், டோர்த்தியாடா, இத்தலார் இந்திரா நகர், எமரால்டு பெரியார் நகர் ஆகிய ஊர்களிலும் மன்ற அறிமுகம் மற்றும் பிரசாரக் கூட்டங்கள் இடம் பெற்றன. அனைத்து இடங்களிலும் மக்கள் அமோக ஆதரவினை நல்கினர். உதகைப் பகுதிகளில் இதுவரை 500 உறுப்பினர்கள் புதிதாகச் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்றச் செய்திகள்

## தாலுகா கமிட்டிக் கூட்டங்கள்

குன்னூர் தாலுகா கமிட்டிக் கூட்டம் 2.9.91 அன்று நடைபெற்றது. மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு மௌனாஞ்சலியுடன் தொடங்கிய கூட்டத்திற்கு தாலுகா கமிட்டித் துணைத் தலைவர் திரு. பரமசிவம் தலைமை தாங்கினார். திரு. கிருஷ்ணசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் சிறப்புரையாற்றிய மன்றத் தலைவர் திரு. திருச்செந்தூரன் அண்மையில் மன்றத் தோழர்கள் சிறைசெல்ல நேர்ந்த சூழ்நிலைகளையும் அதைப் பயன்படுத்தி மன்றத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சில விஷமிகள் கட்டவிழ்த்து விட்ட பொய்யான வதந்திகளையும் விளக்கிப் பேசினார்.

மன்றத் துணைத் தலைவர் திரு. ஏ. சி. டீன் பேசுகையில், நெருக்கடியான சூழ்நிலைகளில் தாலுகா கமிட்டி எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது பற்றி விளக்கமளித்தார்.

கூட்ட முடிவில் எதிர்காலப் பணிகள் திட்டமிடப்பட்டன. திரு. அண்ணாதுரை நன்றி கூறினார்.

✱ கூடலூர் தாலுக்காவின் பல பகுதிகளில் இளைஞர் மற்றும் மகளிர் அமைப்புகளின் கூட்டங்கள் பரவலாக இடம் பெற்றன. செம்பாலா, சலிவயல், சூண்டி செல்வபுரம், கொளப்பள்ளி கலைமகள் தையல் பயிற்சி மையம், நாடுகாணி பொன்னூர் குடியிருப்பு, தேவாலா அட்டி, பாண்டியார் அரசு தேயிலைத் தோட்டம், வாலவயல், சேரங்கோடு அரசுத் தேயிலைத் தோட்டம், பிதிர்காடு காமாட்சி நகர், இரும்புப்பாலம் ஆகிய ஊர்களில் இளைஞரணி மற்றும் மகளிர் அணிப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. கூடலூர் மன்றப் பிராந்திய செயலர் திரு. சந்திரசேகரன், கூடலூர் இளைஞர் அணிச்செயலர் திரு. சக்திவேல் ஆகியோர் கூட்ட ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இளைஞர் அணிச் சார்பாக மன்ற இளைஞர் வளர்ச்சி அலுவலர் திரு. வீரா பாலசந்திரன், மாவட்ட இளைஞர்அணித்தலைவர் திரு. மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாதர் அணி சார்பாக மலையக மாதர் முன்னணியின் பொருளாளர் திருமதி லட்சுமி மற்றும் கூடலூர் மகளிர் அணிச் செயலர் திருமதி ரோஸ்மேரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நீலகிரியில் ஜாதிச் சங்கத்தின் பிரிவினைப் போக்கு
# தமிழர் விரோதப் பிரச்சாரம்

படுக மகாஜன சங்கத்தின் நான்காம் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தின் தீர்மானங்கள், 7-10-91 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், 'இலங்கையர் குடியேற்றத்தை நிறுத்துக - படுகர்கள் கோரிக்கை' என்ற தலைப்பிலான செய்தியில் வெளியிடப் பட்டுள்ளன. அவை;

## அரசியல் சாசனத்தை மீறும் செயல்

முதல் தீர்மானம், ''இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரை நீலகிரியில் குடியேற்றுவதை நிறுத்த வேண்டும். இதுபோன்ற கணக்கெடுக்கப்படாத வெளியார் குடியேற்றம் [Unchecked immigration from outside] கட்டுப்படுத்தப்பட வேண்டும்'' என்று கோருகிறது.

இது திட்டமிட்ட அபத்தப் பிரசாரமாகும். ஒரு விதத்தில் மத்திய, மாநில அரசுகள் மீது அவதூறு சுமத்துவதற்கு ஒப்பாகும். ஏனெனில், தாயகம் திரும்புவோரைக் குடியேற்றும் பொறுப்பு மத்திய மாநில அரசுகளைச் சார்ந்தது.

இலங்கையில் வாழ்ந்தபோது மலைப்பாங்கான குளிர்ப்பிரதேசங்களில் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களாக இருந்த இவர்கள், தமக்கு பழக்கமான தொழிலும் பரிச்சயமான காலநிலையும் உள்ள நீலகிரிக்கு தன்னிச்சையாக இடம் பெயர்கிறார்கள். இந்திய மண்ணில், இந்தியப் பிரஜை ஒருவர் காசுமீரம் தவிர இந்தியாவின் வேறெந்தப்பகுதியிலும் குடிபெயர்ந்து வாழ உரிமை உண்டு.

இந்திய நாட்டின் எல்லைக்குள் உள்ள ஒரு பகுதியில் இந்திய நாட்டின் குடிமக்கள் குடியேறுவது குறித்து இப்படி ஆட்சேபனை தெரிவிப்பது இந்திய அரசியல் சாசனத்துக்கு எதிரானதாகும்.

## நீலகிரி தனிநாடா?

தாயகம் திரும்பியோர் இலங்கையிலேயே இந்திய தூதரகத்தால் இந்தியக் கடவுச்சீட்டு தரப்பட்டு மண்டபம் முகாமில் அதிகாரிகளால் கணக்கெடுக்கப் பட்டு ஆவண ரீதியான அனைத்து உத்தரவாதங்களுடன் தான் தமிழ் மண்ணுக்குள் விடப்படுகிறார்கள். இந்நிலையில் Unchecked Immigration என்று கூறுவது அடிப்படை இல்லாத ஒன்றாகும்.

மேலும் நீலகிரிக்குள் நுழைபவர்கள் எல்லோருமே கணக்கெடுக்கப்பட்டுத்தான் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் நீலகிரி என்ன தனிநாடா? நீலகிரிக்குள் வருபவர்களுக்கு பாஸ்போர்ட் வழங்கவேண்டும் என்று படுக சங்கம் கருதுகிறதா?

## சிரிப்பு வருது! சிரிப்பு வருது!

(ஆ) ''இந்த வெளியாருக்கு வழங்கப்படும் திட்டமிட்ட மறுவாழ்வு உதவிகளை படுகர்கள் எதிர்க்கிறோம்'' என்று இரண்டாவது தீர்மானம் சொல்லுகிறது.

நீலகிரியில் வாழும் தாயகம் திரும்பியோரை அவர்களின் வாழ்க்கை நிலைமைகளிலிருந்து மூன்று விதமாக பிரிக்கலாம்.

i டேண்டீ தேயிலைத் தோட்டங்களில் வாழ்பவர்கள்.

ii தனியார் தோட்டங்களில் அடிமை வாழ்வு வாழ்பவர்கள்.

iii காலனிகளில் வாழ்ந்துகொண்டு கிடைக்கும் கூலித்தொழில்களால் பிழைப்பவர்கள்.

இவர்களில் டேன்டீ தொழிலாளர்கள் பற்றி படுக சங்கம் கவலைப்படாது. தனியார் தோட்டங்களில் கொத்தடிமைகளாக உள்ளவர்கள் படுக சங்கத்துக்கு தேவை. ஏனெனில், மிகக்குறைந்த கூலிக்கு அடிமைகளாக வாழும் இவர்களின் உழைப்பைச் சுரண்டும் பெரும்பாலான முதலாளிகளில் படுகர்களே அதிகம்.

மூன்றாவது பிரிவினரைக் கண்டுதான் படுக சங்கம் அச்சமுறுகிறது. இதற்கு காரணம் இல்லாமலில்லை. இப்பிரிவினர் ஏற்கனெவே இரண்டாவது பிரிவினராக இருந்து மாறியவர்கள். அரசு நிலங்களில் குடியேறி தமக்கென குடிசைகளைப் போட்டுக் கொண்டவர்கள் இவர்கள். எந்த ஓர் அடிப்படை வசதியும் இல்லாத இக்குடியிருப்புகள் மலைச்சரிவுகளிலும் கற்பாறைகளிலும் 'குளிரில் நிமிர்ந்த குடிசைகள்' ஆனால் இரண்டாவது பிரிவான அடிமை நிலையிலிருந்து விடுதலையான இவர்கள் பேரம் பேசும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். இதைத்தான் நிலவுடமையாளர்களைக் கொண்டுள்ள படுக சங்கம் அச்சுறுத்தலாகக் கருதுகிறது.

1983 டிசம்பரோடு தாயகம் திரும்புவோர் வருகை முற்றிலும் நின்றுவிட்டது. அப்படியிருக்க இன்றும் குடியேற்றப்படுகிறார்கள் என்பது போல் படுக சங்கம் கூறுவது வியப்புக்குரியது. அத்தோடு Unchecked Immigration from outside - கணக்கெடுக கப்படாத வெளியார் குடியேற்றம் என்று பழிதூற்றுகிற படுக சங்கம் அடுத்ததாக திட்டமிட்ட மறுவாழ்வு உதவி பெறுபவர்கள் என்றும் கூறுவது சிரிப்பை வரவழைக்கிறது. கணக்கெடுக்கப்படாதவர்களுக்கு எப்படி திட்டமிட்ட மறுவாழ்வு உதவிகள் வழங்க முடியும்? தனக்குத்தானே முரண்படுவதற்குப் பேர்தான் உளறல் என்பதை இச்சங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

## எது அச்சுறுத்தல்?

(இ) ''படுகர்கள், தோடர்கள், கோத்தர்கள் ஆகிய மலைவாழ் பழங்குடியினரான நீலகிரியின்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# தாயகம் திரும்பியோர்: ஒரு தவறான முன்னுதாரணம்

- டாக்டர் வி. சூர்யநாராயணன் -

டாக்டர் வி. சூரிய நாராயணன் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய ஆய்வு மையத்தின் இயக்குனராக உள்ளார். இலங்கைவாழ் இந்தியத் தமிழர்கள் குறித்தும் தாயகம் திரும்பிய இந்தியர்கள் குறித்தும் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இலங்கைவாழ் இந்தியர்கள் மற்றும் தாயகம் திரும்பியோர் பற்றி சிறிதும் கண்டு கொள்ளாத இந்திய எழுத்தாளர்கள், அறிவுஜீவிகள் மத்தியில் இவர் ஒரு சூரியன். 'ஃப்ரொண்ட்லைன்' ஆங்கிலப் பத்திரிகை தனது செப்டம்பர்-அக்டோபர் 91 இதழில் இவரது, 'சமாதானத்துக்கான ஒரு கொள்கை- இந்திய இலங்கை உறவுகள் குறித்து' என்ற தலைப்பிலான கட்டுரை வெளியிட்டுள்ளது. சூழ்நிலைத் தேவை கருதி, அதிலுள்ள ஒரு சிறு பகுதியை இங்கே தமிழாக்கம் செய்கின்றோம். -ஆர்.

## இலங்கையில் - வேண்டப்படாதவர்
## இந்தியாவில் - விரும்பப்படாதவர்

### இந்திய வெளியுறவுக் கொள்கையின் ஒரு துன்பியல் வடிவம்

" தேச விடுதலை இயக்கத்தின் ஒரு விளைவாக வெளி நாடுகளில் உள்ள இந்தியர்கள் பிரச்சினை பற்றி ஜவகர்லால் நேரு ஆழமான ஈடுபாட்டைக் காட்டினார். அவர் பிரதமர் பதவி வகித்த காலத்தில் இலங்கையில் நாடற்றவர்கள் ஆக்கப்பட்ட இந்தியர்களில், தாமாக விரும்பி இந்தியப் பிரஜாவுரிமை கோருபவர்களைத் தவிர ஏனைய அனைவரையும் இலங்கையே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாடு கொண்டிருந்தார். இம்மக்கள் நீண்ட காலமாக இலங்கையில் வாழ்ந்திருப்பதையும் அந்நாட்டின் பொருளாதார வளத்துக்காக தமது உழைப்பைச் சிந்தியிருப்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குமாறு நேரு கொழும்புக்கு அறிவுறுத்தினார். ஆனால், 60பதுகளின் நடுப்பகுதியில் இருந்து இந்தக் கொள்கை மாற்றப்பட்டதோடு, மெல்ல மெல்ல தடம்மாறியும் போனது.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி நாடற்றோர் பிரச்சினை கொழும்பிலும் டெல்லியிலுமுள்ள ஆளும் தரப்பினருக்கு தலைவலியும் தொந்தரவும் கொண்ட வெறும் புள்ளிவிபரவியல் பிரச்சினையாகவே தென்பட்டது; யாழ்ப்பாணத் தமிழர்களுக்கோ அவர்களின் இனச்சார்புப் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு அது ஓர் உவப்பான விசயமாக இருந்தது; சிங்கள மதவாதிகளுக்கு இனக்கலவர நேரங்களில் மிகச்சுலபத்தில் தாக்கி எள்ளி நகையாடக் கூடிய இலக்குப் பொருள்களாக நாடற்றோர் இருந்தனர்.



ஒரு துயரத்தின் தொடக்க விழா : 1964 சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்திடப்படுகிறது.

1964ன் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், அதன் தொடர்ச்சியான 1974 சிறிமா - இந்திரா ஒப்பந்தம் ஆகியன இந்திய வம்சாவழியினரை ஒரு பண்டமாற்-

தொடர்ச்சி 7ம் பக்கம்

# தாயகம் திரும்பியோரைப் பாதுகாக்கவும்
## -முதல்வருக்கு' இலங்கைத் தொழிற்சங்கம் கோரிக்கை.

இலங்கையின் பிரதான தொழிற்சங்கங்களில் ஒன்றான தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் திரு. டி. அய்யாத்துரை தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அண்மையில் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டில் குடிபெயர்ந்து வாழும் இந்திய வம்சாவளியினரும் பாதிக்கப்பட்டதைச் சுட்டிகாட்டியுள்ள அவர், இந்தியாவில் குடிபெயர்ந்துள்ள மலையகத் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்துள்ளார்.

''தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமுன் கீழ்க்கண்டவைகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்'' என்று கோரியுள்ள அவர், பின்வரும் விளக்கத்தையும் தந்துள்ளார்.

''இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு குடிபெயர்ந்துள்ள தமிழர்கள் நான்கு வகையினர்.

(1) ஸ்ரீமா-சாஸ்திரி, ஸ்ரீமா-இந்திரா உடன்படிக்கைகளின் கீழ் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்கள்.

(2) 1983 வன்முறை காரணமாகக் குடியேறிய மலையகத் தமிழர்கள்.

(3) இலங்கை வட- கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்துள்ள ஈழத்தமிழ் அகதிகள்.

(4) போராளிகள்.

இவர்களில் முதல் இரு பிரிவினர் 150 வருடங்களுக்கு மேலாக இலங்கை மண்ணில் உழைத்த இந்திய பிரஜைகள் அல்லது இந்திய வம்சா வழியினர். இவர்களையும் தமிழக போலீசார் விசாரணைக்கு உட்படுத்தி இம்சைக்கு உள்ளாக்கும் நடவடிக்கையைக் கைவிட்டு, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் சார்பில்-கேட்டுக்கொள்கிறேன். அதே வேளை, இலங்கைத் தமிழர்களை வெளியேற்றும் நடவடிக்கையிலிருந்து முதல் மூன்று பிரிவினரும் நீக்கப்படவேண்டியவர்கள் என்பதையும் அறிவிக்க விரும்புகிறோம்.''

திரு. அய்யாத்துரை, ம.ம.ம-மன்றப் பொதுச்-செயலர் திரு. இர. சிவலிங்கத்துக்கும் தனது ஆதரவு தெரிவிக்கும் கடிதமொன்றை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### 6ம் பக்க தொடர்ச்சி

றுப் பொருளாக தரம் தாழ்த்தின. அயல் நாடுகளுடன் சுமுக உறவு (Good neighbourly Relations) என்ற பேரில் இரு நாடுகளும் இம்மக்களை பங்கு போட்டுக் கொண்டன. இவ்வொப்பந்தங்கள் காந்தி-நேரு கொள்கைகளைக் கைகழுவி விட்டதோடு வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் பற்றிய இந்தியாவின் கொள்கைகளில் ஒரு தவறான முன்னுதாரணத்தையும் ஏற்படுத்தி விட்டன.

இதன் விளைவாக இலங்கையில் இருந்த இந்தியப் பிரஜைகள் தாயகம் திரும்பவேண்டிய ஒரு துயரநிலைமை ஏற்பட்டது. நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர் படையின் இந்த வெளியேற்றமே 20ம் நூற்றாண்டின் மிகப்பெரிய இடப்பெயர்ச்சி ஆகும். ஆனால், டெல்லியோ தமிழ்நாடோ இவர்கள் மீது எவ்விதப் பரிவையோ பாசத்தையோ காட்டவில்லை. தாயகம் திரும்பியோர், மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கும் கொடுமையான சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டவர்களாகவே நாடெங்கும் உள்ளனர். இவர்கள் இலங்கையில் வேண்டப்படாதவர்கள்; இந்தியாவில் விரும்பப்படாதவர்கள். [Unwanted in SriLanka and Unwelcome in India]. இந்த அநாதரவான, எதிர்காலமற்ற நலிவுற்ற மக்களை தமிழ்நாட்டின் பலபாகங்களிலும் காணலாம்.

---

**"நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர் படையின் இந்த வெளியேற்றமே 20ம் நூற்றாண்டின் மிகப் பெரிய இடப்பெயர்ச்சி ஆகும்"**

---

துருப்பிடித்த உறைவாள் போன்று தொங்கிக் கொண்டிருந்த இலங்கை,இந்திய வம்சா வழி நாடற்றோர் பிரச்சினை தற்போது இணக்கமான முறையில் தீர்க்கப்பட்டிருக்கிறது.............. ஆனால், அம்மக்களின் பாதுகாப்பு இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது. இந்த இந்திய தமிழர்கள் தமிழ் ஈழக் கோரிக்கையில் எவ்வித பங்கும் இல்லாதவர்கள். அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1978 முதல் அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருக்கின்றது. அப்படி இருந்தும் இனக்கலவரங்களின் போது மிகவும் தாக்குதலுக்குள்ளாகும் மக்களாக இவர்களே உள்ளனர்.

மிக அண்மைக் காலங்களில் இந்திய வம்சாவளியினரான தோட்டப்புற இளைஞர்களை தமது அமைப்புகளில் இணைத்துக் கொள்ள சில தமிழ்ப்போராளிக் குழுக்கள் முயன்றன. ஆனால், அது வெற்றியளிக்கவில்லை. இந்தியத் தமிழர்கள் இன்னமும் தமிழ்த் தீவிரவாதிகளுடன் தொடர்பற்றவர்களாகவே உள்ளனர்''. ✱

# நீலகிரியில் தமிழர் விரோதப் பிரசாரம் 5ம் பக்க தொடர்ச்சி ...

சுதேசி மக்களின் அமைதியான வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது'' என்று படுக மகாஜன சங்கத்தின் மூன்றாவது தீர்மானம் (பொய்யை) முழங்குகிறது.

தோடர், கோத்தர், தொதவர், இருளர், பணியர் ஆகிய பழங்குடியின மக்களே நீலகிரியின் சுதேசிகள் ஆவர் படுகர்களோ இருநூற்றாண்டு காலத்தில் கர்நாடகத்திலிருந்து வந்து குடியேறியவர்கள். இவ்வாறு குடியேறியவர்கள், 'சுதேசிகள்' என்ற பட்டியலில் தம்மையும் வலிந்து சேர்த்துக்கொள்வது விசித்திரமானது. அதோடு பழங்குடியினராக தம்மை அடையாளம் காட்டி அனுதாபம் பெறும் உள்நோக்கத்தோடு ''படுகர்கள், தோடர்கள், கோத்தர்கள் ஆகிய மலைவாழ் பழங்குடியினர்'' என்ற சொற்றொடரை இச்சங்கம் பயன்படுத்தியுள்ளது. பழங்குடியினர் பட்டியலில் படுகர்கள் எங்கே இருக்கிறார்கள்?

வெறும் கூலிகளாகவும் கொத்தடிமைகளாகவும் உள்ள தாயகம் திரும்பிய தமிழர்கள், நீலகிரியின் நிலச்சொந்தக் காரர்களாகவோ அரசு அதிகாரிகளைக் கொண்ட ஆதிக்கச் சக்தியாகவோ இல்லை. இனவாரி ஜனத்தொகையிலும் தமிழர்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர். இந்நிலையில் 'சுதேசிகள்' என்று கூறப்படுவோர்க்கு இவர்கள் எப்படி அச்சுறுத்தல் ஆக முடியும் மாறாக, படுக சங்கத்தின் இதுபோன்ற இனவாத, பிரிவினைவாத கோரிக்கைகளே. நீலகிரிக்கு உண்மையான அச்சுறுத்தலாகும்.

## ஜனத்தொகை பிரச்சினையா?

(ஈ) இச்சங்கம் தனது அடுத்ததீர்மானத்தில் ''இக்குடியேற்றங்களால் ஏற்பட்டுள்ள ஜனத்தொகைப் பெருக்கம் நீலகிரியின் சுற்றுச்சூழலைக் கெடுக்கிறது'' என்று பலிதூற்றுகிறது.

அட்டவணை I

ஜனத்தொகை வளர்ச்சிவீதம்

| ஆண்டு இடைவெளி | தமிழ் நாடு | நீலகிரி | சதவீத வித்தியாசம் |
|---|---|---|---|
| 1951-61 | 11.84 | 31.30 | 19.46 |
| 61-71 | 22.30 | 20.56 | 1.74 |
| 71-81 | 17 50 | 27.56 | 10.05 |
| 81-91 | 14.93 | 11.84 | 3.09 |

அட்டவணை I ன் படி, கடந்த 30 ஆண்டுகளில் 71-81 பதிற்றாண்டில், மட்டுமே மாவட்டத்தின் ஜனத்தொகை மாநிலத்தோடு அதிகரித்துக் காணப்படுகிறது 10.06 சதவீத இந்த அதிகாப்பு தாயகம் திரும்பியோரினால் அல்ல என்பதை மத்திய அரசின் புள்ளிவிபரவியல் அறிக்கை தெளிவுபடுத்துகிறது. [''The increase in population in the district during the decade is 27.56%..... This may be due to the large scale migration of the people from the neighbouring states'' Sensus Book of India-1981 ; TN Series No 20 Pg.14]

அட்டவணை II

ஜனத்தொகை அடர்த்தி (ச.கி.மீ.க்கு)

| ஆண்டு | மாநிலம் | நீலகிரி மாவட்டம் |
|---|---|---|
| 1951 | 232 | 122 |
| 61 | 259 | 161 |
| 71 | 317 | 194 |
| 81 | 372 | 247 |
| 91 | 427 | 277 |

இதேபோல் ஜனத்தொகை அடர்த்தியைப் பார்த்தால் மாநிலத்தோடு ஒப்பிடுகையில் நீலகிரி மாவட்டம் மிகவும் குறைவான நிலையிலேயே இருந்து வந்துள்ளது. [பார்க்க அட்டவணை ii ] சுற்றுச்சூழலைப் பாதிக்குமளவுக்கு இச்சனத்தொகை அடர்த்தி கடுமையானதல்ல உண்மையில் காடழிப்பினாலேயே நீலகிரியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. இக்காடழிப்பில் பெரும் பணக்காரர்களே ஈடுபடுவார்களேயன்றி ஏழைகளான தாயகம் திரும்பியோர் அல்ல. சாதாரண படுக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தாத இச்சங்கம், தனது பணக்கார உறுப்பினர்களையும் நண்பர்களையும் பாதுகாப்பதற்காக சுற்றுச் சூழல் பிரச்சனைக்கு தாயகம் திரும்பியோர் ப் பலி தூற்றமுனைகிறது.

மொத்தத்தில் படுக மகாஜன சங்கத்தின் அத்தனை கோரிக்கைகளும் அடிப்படை இல்லாதவை; ஆதாரமில்லாதவை; உள்நோக்கம் கொண்டவை; தமிழ்நாட்டின் அமைதியான வாழ்வுக்கு ஆபத்தானவை. 90 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளடக்கிய தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் அண்மைக் காலங்களில் விழிப்புணர்வு பெற்று வருவதும் ஒருங்கிணைப்பாகி வருவதும், அதனால் அவர்களிடையே பேரம் பேசும் ஆற்றல் பெருகி வருவதும் கண்டு அஞ்சுகிற நிலவுடமையாளர்கள், இப்பாட்டாளி வர்க்கத்தின் மீது ஒடுக்குமுறையை மேற்கொள்ளவும் சுரண்டலை அதிகரிக்கவும் காரணகாரியங்களைத் தேடி அலைகிறார்கள். அதற்குக் கருவியாக இனவாத, பிரிவினைவாத, வகுப்புவாத விஷவித்துக்களை கையில் எடுத்துக்கொண்டு, படுக மக்களின் பாதுகாவலர்களாக தங்களைக் காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். எனவே தான், நீலகிரியை படுகர்களுக்கு மட்டுமே உரிய பகுதியாக தோற்றம் தந்து, அங்கு தமிழர்கள் குடியேறுவதை எதிர்க்கிறார்கள்.

ஆனால், அத்தமிழர் எதிர்ப்புணர்வை வெளிப்படையாகக் காட்டுவதற்குத் தயங்குகிற இவர்கள், 'அன்னியா குடியேற்றம்' என்று கூப்பாடு போடுகிறார்கள். தமது தமிழர் விரோத நிலைபாடு என்ற நச்சுப்பாம்பை மூடிவைப்பதற்கு, 'தாயகம் திரும்பியோர்' என்ற கூடையை பயன்படுத்துகின்றனர்,


தொடர்ச்சி 10ம் பக்கம்

## தாயகம் திரும்பியோர் நிலைமை

# ஆய்வு செய்யப்படும்

**- பிரதமர் உறுதி -**

இலங்கை அமைச்சரும் இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களின் பிரதிநிதியுமான திரு. எஸ். தொண்டமான் கடந்த செப்டம்பர் மாதம் இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களை சந்தித்து தாயகம் திரும்பியோர் பற்றி பேச்சு நடத்தினார். அதில் பின் வருவன பற்றிப் பேசப்பட்டது.



திரு. சௌ. தொண்டமான்

(அ) தாயகம் திரும்பியோருக்கு வழங்கப்பட்ட மறுவாழ்வு உதவிகள் அவர்களுக்குச் சேராமை;

(ஆ) ஈழத்தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தாயகம் திரும்பிய இந்தியர்களை பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளுதல்;

(இ) தாயகம் திரும்புவதற்காக இலங்கையில் காத்துக் கொண்டிருக்கும் மேலும் $2\frac{1}{2}$ லட்சம் இந்தியரின் எதிர் காலம்.

இப் பேச்சு வார்த்தையின் விளைவாக தாயகம் திரும்பியோர் பற்றிய ஒரு முழுமையான கள ஆய்வு [Survey] செய்யப்படும் என்று பிரதமர் உறுதியளித்துள்ளார். இதனை மனமுவந்து வரவேற்கிறோம்.

ஏற்கனவே, தமிழக முன்னாள் மறுவாழ்வுத்துறை அமைச்சர் திருச்சியிலும் கோத்தகிரியிலுமாக இருதடவை இதுபோன்ற உறுதிகளை பகிரங்கமாக அறிவித்திருந்தும் நடைமுறையில் ஏதுமே இல்லை அதுபோலன்றி பிரதமரின் உறுதிமொழி செயல் வடிவம் பெற வேண்டும் என்று மக்கள் மன்றம் கோருகிறது. இந்த ஆய்வின் போது பின்வரும் விசயங்கள் மனதிற் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தவிரும்புகிறோம்

(1) மறுவாழ்வுத் திட்டங்கள் தோல்வியடைந்தமைக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(2) மறுவாழ்வுத் திட்டங்கள் சீரமைக்கப்பட்டு, இதுவரையில் கிடைக்காதவர்களுக்கு மீண்டும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். புதிய திட்டங்கள் தாயகம் திரும்பியோரின் வாழ்நிலைமைகள், மனோபாவம், பரிச்சயம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட வே டும்.

(3) மேற்படி கள ஆய்வு அரசு அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்படாமல் ஒரு நீதிபதியைத் தலைவராகக் கொண்ட கமிசன் மூலம் நடத்தப்பட வேண்டும். தாயகம் திரும்பியாரிடம் பணியாற்றும் அமைப்புகள் இயக்கங்களும் கலந்தாலோசிக்கப் படவேண்டும்.

நரசிம்மராவ் - தொண்டமான் பேச்சு வார்த்தயில் கண்டுள்ள இரண்டாவது விசயம் (மேலே,ஆ] பற்றி ம.ம.ம மன்றம் தொடர்ந்து போராடி வந்துள்ளது. இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழர்களில் அகதிகள் யார்? தாயகம் திரும்பியோர் யார்? என்பது பற்றிய தெளிவான விளக்கத்தை அரசு விளம்பரப்படுத்த வேண்டும். வெறும் பயண ஆவணங்களை மட்டும் வைத்து தாயகம் திரும்பியோரை அடையாளம் காண்பது இயலாது ஏனெனில், மறுவாழ்வு உதவிகள் பெறுவதற்காக இவற்றை அரசு அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பார்கள். அத்துடன் தாயகம் திரும்பி பல ஆண்டுகள் ஆன பின்னரும் இப்பயண ஆவணங்களை கைவசம் வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.



பிரதமர் திரு. நரசிம்மராவ்

அடுத்ததாக, இலங்கையிலிருந்து இன்னும் வரவுள்ள $2\frac{1}{2}$ லட்சம் பேர் பற்றிய விசயம் மிகவும் சிக்கலானது. அவர்கள் தமிழ்நாட்டுக்கு மீண்டும் வரக்கூடாது என்பதே எமது நிலைபாடு. அதற்குப் பதிலாக ஏற்கனவே கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்துள்ளவர்களில் இந்திய வம்சா வழியினருக்கு மட்டும் இந்தியப் பிரசாவுரிமை வழங்கி சமன் செய்து கொள்ளலாம் என்பது திரு. தொண்டமானின் வாதம் இதுவே சரியானதாகவும் அமையும். ஆயினும் இது மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று கோருகிறோம். ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை. மாறாக கடுமையான விமர்சனத்துக்கே உள்ளாகியிருக்கிறது. இந்த $2\frac{1}{2}$ லட்சம் பேரின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் இலங்கையில் மீண்டும் ஒரு நாடற்றோர் பிரச்-

தொடர்ச்சி 10ம் பக்கம்

## தாயகம் திரும்பியோர் நிலைமை ......

9ம் பக்க தொடர்ச்சி

சினை உருவாகி விடும். இதில் இந்திய அரசாங்கத்துக்கு உள்ள கடமையும் உரிமையும் புறக்கணிக்கப்பட முடியாது.

மொத்தத்தில் தொண்டமான்-நரசிம்மராவ் பேச்சு வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை. பிரதமர் நரசிம்மராவ் காலத்திலேயே இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் அதன் பின் மிகவும் அரிது. ஏனென்னில் இன்றுள்ள தலைவர்களில் இலங்கை வாழ் இந்தியர் பிரச்சினைகளை -நேரு காலம் முதற்கொண்டே-ஈடுபட்டு புரிந்து கொண்டவர் பிரதமர் ஒருவர்தான். எனவே தாயகம் திரும்பிய இந்தியர்களின் பிரச்சினையை அடிப்படையிலேயே புரிந்துகொள்ளும் ஆற்றல் அவருக்கு உண்டு என்று நம்புகிறோம். ஆகவே வெறும் உறுதி மொழிகள் அடிப்படையில் அன்றி அவை செயல் வடிவம் பெறவும் வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

---

# படுகர் சங்கத்துக்கு

## 'இந்து' பத்திரிக்கை பதில்

'நீலகிரி நியூஸ்' அக்டோபர் 91 இதழில் வெளிவந்துள்ள ஒரு செய்தியில், ''இளம் படுகர் சங்க ஆண்டுக் கூட்டம் உதகையில் நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்பியவர்களை பெருமளவில் குடியமர்த்துவதன் மூலம்-நீலகிரியின் பாரம்பரியம் மற்றும் மரபுகளுக்கு கேடு விளைவிக்கிறது'' என்று பேசப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

படுக மகாஜன சங்கம், இளம்படுகர் சங்கம் இரண்டினதும் முழுப்பொய்ச் செய்திகளுக்கு நாம் பதில் கூறுவதைவிட 'இந்து' ஆங்கிலப் பத்திரிகை கூறியுள்ள பதில் பொருத்தமானது. 9.11.91 'இந்து' இதழில் 'Protecting eco-system of the hills' என்ற செய்திக் கட்டுரை பின் வருமாறு கூறுகிறது:

I 1989 செப்டம்பரில் நியமிக்கப்பட்ட தமிழக அரசின் உயர்மட்டக் குழு ஒன்றின் ஆய்வறிக்கையின் படி மொத்தம் 51,604 நில ஆக்கிரமிப்பாளர்களில் 48,834 பேர் உள்ளூர் வாசிகள். மிகுதி 2,770 பேர் தாயகம் திரும்பியோரும் ஏனைய வெளியாரும் ஆகும். ஆக்கிரமிப்பாளர்களில் 33,147 பேர் எவ்வித நிலமும் இல்லாதவர்கள் (இதன் அர்த்தம் மிகுதி 18,457 பேர் நிலச் சொந்தக்காரர்கள் என்பதே)

II இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் பரவலாக நிகழ்ந்த நகர்மயமாக்கலின் விளைவாக மலைப் பகுதியின் சுற்றுச்சூழலில் வெகுவாக மாற்றமடைந்துள்ளது.

III ஆதிவாசிகளுக்காக ஒதுக்கப்பட்ட பல நிலங்கள் தற்போது ஆதிவாசி அல்லாதவர்களினாலும் அரசு இலாக்காக்களினாலும் அநுபவிக்கப்பட்டு வருகின்றன

இவ்விதழில் இடம் பெற்றுள்ள 'நீலகிரியில் தமிழர் விரோத பிரச்சாரம்' என்ற கட்டுரைக்கு முடிவுரை போன்று 'இந்து' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது. அதற்காக நன்றி செலுத்துகிறோம்.

# கலையே சிறந்த கருவி

ம.ம.ம. மன்றத்தின் வருடாந்த கலைவிழா அக்டோபர் 17ம் தேதி குன்னூர் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. பாட்டு, கவிதை, கட்டுரை, பேச்சு, நடனம், நாடகம், வினோத உடை, பொது அறிவு ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. அனைத்து போட்டிகளிலும் சிறுவர் சிறுமியரும், இளைஞர், பெண்களும் ஆர்வமுடன் பங்கேற்று, தமது கலாவிலாசத்தை வெளிப்படுத்தினர்.

விழாவில் சிறப்புரையாற்றிய மன்றத்தலைவர் திரு. திருச்செந்தூரன், ''மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு வேறெந்த வடிவத்தையும் விட கலையே சிறந்த கருவியாகும். எனவே, இளைஞர்கள் கலைத்துறையில் ஆழமாகக் காலடி வைக்க வேண்டும் இதைப்போன்ற கலைவிழாக்களை நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மன்றத்துணைத்தலைவர், துணைப் பொதுச் செயலர், கூடலூர் பிராந்தியச் செயலாளர் ஆகியோரும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி முடிவில் மன்றக் கலைக்குழுவினரின் சிறப்பு நாடகங்கள் இடம்பெற்றன.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை தொண்டரணி மற்றும் கலைக்குழு உறுப்பினர்கள் தயாரித்திருந்தனர். மன்ற ஊக்குனர் திரு. ராமச்சந்திரன் நன்றி நவின்றார். விழா தொடக்கத்தில் கலைவாணி பூஜையும் இடம் பெற்றது.

---

## தமிழர் விரோதப் பிரசாரம்

8ம் பக்க தொடர்ச்சி

அடிபடுவது கூடையாக இருக்கட்டும் என்ற நப்பாசை அவர்களுக்கு.

நீலகிரியில் ஏற்பட்டுவரும் இந்தத்தமிழர் விரோத மனப்பான்மை குறித்து தமிழக மக்கள், விழிப்போடு இருக்க வேண்டும். அவ்வாறே, தேசத்தின் ஒற்றுமையையும் அமைதியையும் விரும்பும் சாதாரண படுக மக்கள், இவர்கள்பால் எச்சரிக்கையாக இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

-எதுமலை இளமதியான்-

# அங்கே இடித்தவர்கள் இங்கே படைத்தார்கள்

"வணக்கம்'' - ஒரு குழந்தையின் மழலை போன்று ஒலித்தது அந்தக் குரல்.

பொதுச்செயலர் அந்த வெள்ளைக் காரர்களை அறிமுகப் படுத்தியப் போது அவர்கள் இருகரம் கூப்பி, தமிழில் வணக்கம் செலுத்தியது, பெருமித மாக இருந்தது.

ஜெர்மன் நாட்டிலிருந்து டியட்ரிச், தண்யா, கேத்யா, சூசன், கேத்தரின், தான்ச்சா ஆகிய ஆறு மாணவர்கள்-இவர்களில் டியட்ரிச் மட்டுமே ஆண். ஒன்றரை மாதக் கால கல்விச் சுற்றுலாவாக கடந்த ஜூலை மாதம் கோத்தகிரி ம.ம.ம.மன்றத்துக்கு விஜயம் செய்தனர்.

நீலகிரியிலுள்ள ஏழைமக்களோடு ஒன்றிப் பழகு வதன் மூலம் அவர்களைப் பற்றிய சமூகக் கல்வியை பெறுவதே அவர்களின் நோக்கமாயிருந்தது.

அதனால், கோத்தகிரி பாண்டிய நகரில் மன்றக் கட்டிடம் கட்டும் பணியில் இம்மாணவர்கள் ஈடுபட்ட னர். கல் சுமப்பது, மண்சுமப்பது, முதற்கொண்டு அனைத்து வேலைகளையும் அவர்களே செய்தனர்.

## ஜெர்மன் மாணவர்கள் புகட்டும் பாடம்


1.9.91 அன்று மன்றக் கட்டிடத் திறப்பு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது, தலைவர் திரு. திருச்செந்தூரன் விழாவில் கலந்துகொண்டார். பாண்டியநகர் மக்கள் ஜெர்மானிய மாணவர்களுக்கு மலர் மாலைகளும் பரிசுப் பொருட்களும் வழங்கினர். இக்கால கட்டத்தில் மன்ற முக்கியஸ்தர்கள் அனைவரும் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த ர். இதனால், இம்மாணவர்களுக்கு ஒத்துழைக்க முடியாத நிலைமை இருந்தது. அப்படி இருந்தும் இவர்கள் தாமாகவே ஊர்களுக்குச் சென்றும் பணிபுரிந்தும் மொழி தெரியாத மக்களோடு பழகியும் பேசியும் பாடியும் ஆடியும் தமது வெள்ளை மனத்தை வெளிப் படுத்தினர்.

குன்னூர் அய்யப்பன் காலனியிலும் சமுதாயக் கூடம் கட்டும் பணியைச் செய்தனர். குன்னூரில் இளைஞர், மகளிர், தொண்டர் அணி உறுப்பினர்களையும், தாலுகா கமிட்டி உறுப்பினர்களையும் கண்டு உரையாடினர். அளக்கரையில் பாதிக்கப்பட்டவர்களை கண்டு பேசினர். அய்யப்பன் நகர் சமுதாயக் கூடத்துக்கு அரிக்கன் விளக்கொன்றை அன்பளிப்பு செய்தனர். இவ்வூர் மக்கள் இம்மாணவர்களுக்கு விருந்தளித்து மகிழ்ந்தனர்.

கூடலூரில் சிரமதானப் பணியில் இவர்கள் ஈடுபட்டார்கள். கலைக்குழுவினர் நடத்திய நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பித்தனர், மரப்பாலம் தேயிலைத் தோட்டத்தில் மக்களை சந்தித்து உரையாடினர். இறுதியாக செப்டம்பர் 10,11 ஆகிய இரு தினங்கள் கோத்தகிரியில் அனைத்து பணியாளர்களையும் சந்தித்து தமது ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் முன் வைத்தனர்.

மொத்தத்தில் நமது மக்களோடு மக்களாக ஒன்றி னைந்து போயினர். உணர்வுக்கும் உறவுக்கும் உழைப் பிற்கும் மொழியோ, மதமோ, கலாசாரமோ, தேசமோ ஒரு தடையாக இருக்க முடியாது என்பதை ஜெர் மன் மாணவர்கள் நிரூபித்தனர்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் கிழக்கு ஜெர் மனியையும் மேற்கு ஜெர்மனியையும் பிரிப்பதற்காக க்கட்டப்பட்ட பெர்லின் பெருஞ்சுவரை அண்மையில் ஜெர்மானிய மக்கள் இடித்து உடைத்தனர். ஒரே நாட்டு மக்களை பிரித்து வைத்திருந்த அந்தத் தடைச்சுவர் மக்களின் எழுச்சியால் மண்ணோடு மண்ணானது. அதே நாட்டவர் இங்கே நீலகிரியில் சுவரை கட்டி மன்ற கட்டிடத்தை எழுப்பினார்கள். அங்கே இடித்தவர்கள் இங்கே படைத்தார்கள்.



**புன்சிரிப்போடு மண்சுமக்கும் மாணவர்கள்**

மனிதர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பவற்றை உடைத்தெறியவும் உறவாக இருப்பவற்றை படைத்துக்காக்கவும் வேண்டும் என்பதை அவர்கள் நமக்கு உணர்த்தியிருக்கிறார்கள். மருத்துவ கல்வி போன்ற உயர்கல்வி கற்கும் மாணவர்களாக இருந்தும் கூட சாதாரண மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிப் போய் அவர்கள் நடந்து கொண்ட விதம் நமது மாணவர்களுக்கும் நாட்டவருக்கும் நல்ல பாடம். எந்த ஒரு கல்வியையும் சமுதாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற அவர்களின் நடைமுறைக் கல்வி, நமது மனப்பாடக் கல்விக்கு ஓர் அடி.

ஜெர்மானிய மாணவர்கள் எல்லா விசயத்திலும் நமக்கு பாடம் புகட்டியுள்ளார்கள்.

*சமுதாயப் பிரச்சினைகள் கண்டு மனம் பொங்குபவர்கள் தமக்குள் அடக்கிக் கொள்ளாமல் தங்கள் எண்ணக்குமுறல்களை சுருக்கமாக எழுதியனுப்பலாம். 'பொங்கு மனம்' தொடரும்.- ஆர்.*

# பொங்கு மனம்

## குழந்தைத் தொழிலாளர்

### -பெற்றோர் கவனத்திற்கு

இன்று வறுமையில் வாழும் பெரும்பாலான குடும்பங்களில், பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி விடுகின்றனர். கல்வி கற்க வேண்டிய வயதில் அவர்களை கடைகளிலும், ஓட்டல்களிலும் பணக்கார வீடுகளிலும் தங்கள் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துகின்றனர். முதலாளிகளோ இச் சிறுவர்களை மிக இழிவான தொழில்களில் ஈடுபடுத்தி சுரண்டுகிறார்கள். வயதுக்கும் உடலியல் செயல்பாட்டுக்கும் பொருத்தமில்லாத வேலைகளும் தரப்படுகின்றன. அவற்றைச் சிறுவர்கள் செய்வதற்கு சிரமப்படும்போது முதலாளிகள் அவர்களைத் திட்டுவதும், அடிப்பதும் சகஜமாக உள்ளது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நன்றாக பராமரிப்பதாக எண்ணிக் கொள்வதுதான் இதில் கவனிக்க வேண்டிய அம்சம். உணவே கொடுக்க முடியாத தம்மிடம் இருப்பதை விட மிஞ்சும் சோற்றையாவது அதிகளவுக்கு உண்ண முடிகிறதே என்ற வறுமை காரணமாகவும் அறியாமை காரணமாகவுமே பெற்றோர்கள் அப்படி எண்ணுகிறார்கள்.

இப்படி படிப்பறிவின்றி சிறு வயதிலேயே வேலைக்குப் போய்விடுபவர்கள் மனம் பாதிக்கப்படுகிறார்கள். அடிமைத் தனமும் உறைந்து விடுகிறது. எதிர்காலத்தில் இவர்கள் கொத்தடிமைகளாக வாழும் நிலைமையை அடைகிறார்கள். இது எதிர்காலச் செல்வங்களான நமது குழந்தைகளுக்கு இன்றைய சமுதாயம் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.

எனவே, பெற்றோர்கள் 15 வயதுக்கு உட்பட்ட தங்களின் பிள்ளைகளை எத்தகைய வேலைக்கும் அனுப்பக்கூடாது. தங்கள் பிள்ளைகளை கல்வி கற்கவைப்பதற்கு வசதியில்லா விட்டாலும் இன்று உள்ள பல சமூக நல இயக்கங்களோடு தொடர்பு கொண்டு ஒரு சிறிது உதவியாவது பெற முயற்சி செய்ய வேண்டும். எதிர்காலத்தில் தங்கள் குழந்தைகளை எல்லாம் வல்ல ஆற்றல் உள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தை பெற்றோர்கள் மனதில் கொள்வது அவசியம்.

என். சுப்பிரமணியம்
ஆரோட்டுப் பாறை, கூடலூர்.

## நம்மில் ஒற்றுமை நீங்கிடின்...

நாம் இலங்கையில் இருந்து தாய்நாடு வந்தோம் ஒப்பந்தம் செய்து இங்கு அனுப்பிவைத்து விட்டார்கள். இங்கே நமக்கென்று எதுவும் இல்லாமல் பிரிவுபட்டு வாழ்கிறோம். இதனைக் கண்டு முதலாளிகள் நம்மை அடிமைகளாக நடத்துகிறார்கள். இங்குள்ள வேறு இனத்தவர்கள் நம்மை நீலகிரி மாவட்டத்தை விட்டு எப்போது விரட்டுவோம் என்று திட்டம் போடுகிறார்கள் அதைக்கண்ட பிறகாவது நாம் ஒன்றுபட்டாக வேண்டும்.

நீலகிரிக்குள் உள்ள நமக்குள் மூன்று பிரிவு உள்ளது. ஒன்று டேண்டீயில் உள்ள தொழிலாளர்கள். இவர்களுக்கு ஓரளவு தொழில் வசதி, வீட்டு வசதி இருக்கிறது. இதனால் மற்ற தொழிலாளர்களைப் பற்றி இவர்கள் கண்டு கொள்வது இல்லை.

இரண்டாவது, தனியார் முதலாளிகளிடம் அவர்களின் நிலத்தில் கொத்தடிமைகளாக பிழைப்பவர்கள். இவர்கள், முதலாளிகளுக்கு பயந்து கொண்டும் அவர்கள் கூறும் வார்த்தையை எதற்கெடுத்தாலும் கேட்டுக் கொண்டும் ஒதுங்கி வாழ்பவர்கள்.

மூன்றாவது காலனிகளில் இருப்பவர்கள். இவர்கள் மட்டுமே எந்த ஒரு பிரச்சினைக்கும் போராடுவதற்கு முன்வருகிறார்கள்.

இந்த மூன்று பிரிவுமே ஒன்று சேர்ந்து விட்டால் நம்மை யாருமே அசைக்க முடியாது. நாம் எல்லோரும் ஒரு தாய் மக்கள் போல் ஒன்றுபட்டு நடக்கவேண்டும். நமக்கு எவ்வளவோ உதவியாக மக்கள் மறுவாழ்வு மன்றம் பாடுபடுகிறது. இனிமேல் நாம் எல்லோரும் ஒன்று கூடி இம்மன்றம் சொல்படி நடப்போமானால் நமக்கு வருங்காலங்களிலும் நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கும் நன்மை கிடைக்கும். எவ்வளவோ முன்னேற்றத்திற்கும் வரலாம்.

பி.எம். ரமையா,
பொன்னம்பலம்,
மாரிஸ் காலனி, கோத்தகிரி.

---

"சிறு வயதில் தொழில் செய்வது குழந்தைகளின் சுகாதாரத்தை, கல்வியை, முன்னேற்றத்தை பாதிக்கும் என்பதனால், குழந்தைகளை தொழில்களில் ஈடுபடுத்துகின்ற பொருளாதாரச் சுரண்டலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் உரிமை உண்டு."-ஐ. நா. வின் குழந்தைகள் உரிமை குறித்த சாசனம், விதி எண் 32- ✱

---

# இணைந்த கரங்கள்

நீலகிரி மலையக மக்கள் மறுவாழ்வு மன்றமும், சென்னை 'டெக்ராஸ்' நிறுவனமும் இணைந்து சென்னையில் நடத்தவுள்ள 'தாயகம் திரும்பியோர் மாநில மாநாடு' தாயகம் திரும்பியோரை அமைப்புருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கும். இதை முன்னிட்டு இவ்விரு அமைப்புகளின் வரலாறுகளை சுருக்கித் தருகிறோம்.

## ம.ம.ம. மன்றம்

வழக்கமாக இயக்கங்களை சில தனிநபர்கள் தோற்றுவிக்கிறார்கள்; பெயரிடுகிறார்கள். ஆனால், மக்களே ஓர் இயக்கத்துக்குப் பெயர் வைத்துத் தொடங்கியதுண்டா?

ஆம் 1985 ம் ஆண்டு பெப்ரவரியில் கோத்தகிரியிலுல்ல வெஸ்ட்புருக்கில் நடைபெற்ற தாயகம் திரும்பியோர் கருத்தரங்கு ஒன்றில் மக்களால் சூட்டப்பட்ட பெயர் தான் 'மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்'.

நீலகிரியில் வாழும் தாயகம் திரும்பிய தமிழ் மக்களின் உரிமைக் குரலாக, அவர்களின் உணர்வு வெளிப்பாடாக உருவாக்கம் பெற்றதுதான் இம் மன்றம்.

இன்று 6000 பேரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள நமது மன்றம் கோத்தகிரி கூடலூர், குன்னூர் ஆகிய பிராந்தியங்களையும், பஞ்சாயத்துக் கமிட்டி (கிராமக் கிளைகள்) தாலுகா கமிட்டி, ஆகிய படி முறை அமைப்புக்களையும், இளைஞர் அணி, தொண்டர் அணி, சிறுவர் சீரணி, கலைக்குழு ஆகிய வெகுஜனப் பிரிவுகளையும் கொண்டு ஆலமரமாக விழுதுகளை விட்டு வளர்ந்துள்ளது.



'இரத்த ஓட்டம்' இர. சிவலிங்கம்

மக்களை அமைப்புருவாக்கி அவர்தம் உரிமைப் போராட்டங்களை நடத்துகிற அதேவேளை, அவர்களிடையே கருத்தரங்குகள், கலைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வீடமைப்பு, கல்வி மற்றும் எழுத்தறிவு, சுகாதாரம் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு பாடுபடுவதும் இம் மன்றத்தின் பணிகள்.

கடந்த ஆறு ஆண்டு காலத்தில் இம் மன்றம் எதிர்கொண்ட பிரச்சினைகள், நீலமலைத் தொடரை விட நெடியவை. தாயகம் திரும்பியோரை அடக்கி ஒடுக்கிய அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர்கள், பண முதலைகள், இனவாத சக்திகள் என்பவற்றுக்கு மத்தியில்

## டெக்ராஸ்

1983 இலங்கையின் இனப்படு கொலைகளின் விளைவாக அகதிகள் தமிழ்நாட்டில் குவிந்து கொண்டிருந்த காலகட்டம். பல சேவை அமைப்புகள் ஒன்று சேர்ந்து சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தி அகதிகளுக்கு எந்த அடிப்படையில் ஆராயலாம் என்று பலதரப்பட்ட கருத்துக்கள் பரிமாறப்பட்டன, அதில் ஒரு குரல் ஓங்கி ஒலித்தது.



"இணைந்த கரங்களை இணைத்த கரங்கள்" அருட்தந்தை ஆர். குட்டின்ஹா சே.ச.

''அகதிகள் பிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினை. அவர்களுக்கு உதவு வதற்காக பல அமைப்புகள் உள்ளன. அரசாங்கமும் கவனம் செலுத்தும். பிரச்சினை தீர்ந்த பிறகு இவர்கள் தமது நாட்டுக்கு போய்விடுவார்கள். ஆனால் இந்த நாட்டிலேயே நிரந்தரமாக வாழப்போகும் இந்திய குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவழித் தாயகம் திரும்பியோரைப் பற்றி நாம் கருத்தில் கொள்ளவில்லையே! தாயகம் திரும்பியோரை எல்லோரும் புறக்கணிக்கிறார்கள், அவர்களின் வாழ்க்கை நிலைமையோ அகதிகளை விட மோசமான நிலையில் உள்ளது. எனவே, அவர்களைப் பற்றிதான் கருத்தில் கொள்ள வேண்டும்.''

இவ்வாறு நறுக்கென்று ஒலித்த குரல் அருட்தந்தை குட்டின்ஹா அவர்களுடையதாகும். பெங்களூர் வைட்ஃபீல்டில் விழியிழந்த குழந்தைகளுக்கென பள்ளி நடத்தி ஒளியூட்டி வரும் அருட்தந்தை குட்டின்ஹாவின் முயற்சியின் விளைவாகவே 'டெக்ராஸ்' அமைப்பு உருவானது.



துடிப்புள்ள செயல்திறன்: ஜேக்கப் பெள்ளி

தமிழகமெங்கும் வாழும் தாயகம் திரும்பிய இந்தியர்களின் பொருளாதாரம், கல்வி, குடியிருப்பு மற்றும் நலன்களை அவ்வப் பகுதிகளிலுள்ள சேவை அமைப்புக்களைப் பயன்படுத்தி மேம்படுத்தும் நோக்கத்துடன் 'டெக்ராஸ்' அமைப்பு

தொடர்ச்சி 14ம் பக்கம்

அறியாமையும் அடிமைத்தனமும் நிறைந்த மனிதர்களை கட்டியெழுப்பும் பிரம்மப் பிரயத்தனத்தை மன்றம் செய்தது; செய்து வருகிறது.

பல தடவை குடிசைகள் கொழுத்தப்பட்ட, வேற்றினத்தவர்களால் தூற்றப்பட்ட, அரசு அதிகாரிகளால் அவமானப்படுத்தப்பட்ட, போலீசாரினால் பலவந்த வெளியேற்றம் செய்யப்பட்ட இம்மக்கள் வாழ்க்கையில் ஒளியிழந்தவர்களாகவும் தமது பிரச்சினைகளை முறைப்படுத்தி வெளிப்படுத்தத் தெரியாத ஒலியிழந்தவர்களாகவும் இருந்தனர். இவர்களுக்கு ஒலியாகவும் ஒளியாகவும் இயங்கும் மன்றம் இவர்களிடையே தன்னம்பிக்கை ஏற்படுத்திட பெரும் முயற்சியை செய்ய வேண்டியிருந்தது; பல நிலப் போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது.

கைகட்டி, தலையாட்டி வாழ்ந்த இம் மக்கள் இப்போது அரசு அதிகாரிகளைக் கேள்வி கேட்கிறார்கள்; பேரணி நடத்துகிறார்கள்; பொதுகூட்டம் போடுகிறார்கள்; போராட்டம் நடத்துகிறார்கள். தாம் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வை அடைந்திருக்கிறார்கள்.

அருட்தந்தை குட்டின்ஹா அவர்களே இவ்வமைப்பைத் தோற்றுவித்த ஊற்றுக்கண்; அருட்திரு. அல்போன்ஸஸ் அவர்கள் அதன் ஊக்கவிசை; பொதுச் செயலர் திரு. இர. சிவலிங்கம் இம்மன்றத்தின் ரத்த ஓட்டம்; தலைவர் திரு. திருச்செந்தூரன் இதன் ஒளி. ஆனால் மன்றத்தை நேசித்தும் நினைத்தும் அதில் உணர்வும் ஊக்கமும் கொண்டு தம்மை இணைத்துக் கொண்டு வரும் மக்களே இதன் இதயம்.

ம. ம. ம. மன்றம் நீலகிரியில் இன்று வெறும் புறக்கணிக்க முடியாத ஒரு பெரும் சக்தி. இது பெயரளவில் அன்றி, உண்மையிலேயே மக்களின் மனங்களை வெளிப்படுத்தும் 'மக்கள் மன்றம்'



செயற்படுகிறது. இவ்வமைப்பின் செயல் திறன்களையும் இலக்குகளையும் தீவிரப்படுத்தியதில் இதன் முன்னாள் இயக்குனர் அருட்திரு. அந்தோணிசாமி அவர்களின் பங்கு மிக ஆழமானதாகும். அதுபோல், துடிப்புடன் இதனை இன்று நிர்வகித்து வரும் இதன் இயக்குனர் அருட்திரு. ஜேக்கப் பெள்ளி, தாயகம் திரும்பியோரின் குரலை எங்கும் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்றும் எண்ணம் கொண்டவர்; அவர்கள்பால் அன்பு கொண்டவர்.

இன்று சென்னை, கோவை, மதுரை, திருச்சி என்ற வகையில் நான்கு பிராந்தியங்களாகச் செயற்படும் 'டெக்ராஸ்' மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தோடு இணைந்து ஏற்கனவே திருச்சியில் 1987ல் தாயகம் திரும்பியோர் மாநில மாநாடு ஒன்றை நடத்தியது.

தாயகம் திரும்பியோரின் உரிமைகள் பாதிக்கப்படும்போது, அதற்காகக் குரல் எழுப்புவதில் 'டெக்ராஸ்' எப்போதுமே பின்வாங்கியதில்லை. இனியும் பின்வாங்காது.

## காந்தியும் தாயகம் திரும்பியவரே

கோத்தகிரியில் நடைபெற்ற காந்திஜெயந்தி விழாவில் தலைமை வகித்து பேசிய மன்றத் தலைவர் திரு. திருச்செந்தூரன், ''காந்தியும் ஒரு தாயகம் திரும்பியவர்தான். தென்னாபிரிக்காவிலிருந்து தாயகம் திரும்பிய ஒருவரினால் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததென்பதை எண்ணி தாயகம் திரும்பிய நாம் பெருமை கொள்ளவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

## சிறை சென்றார்; செம்மல் ஆகினார்.

- ப. சந்திரபோஸ் -

தோழா!
உன்னைச் சிறைவைத்த
கொடுமையை எண்ணி
தளராதே!
உன்னை,
ஏளனம் செய்த
அந்தக் கயவர்களுக்குக்
காலம் பதில் சொல்லும்.

மானம் நமக்கு
உண்டென்றால்
மானம் காப்பது
கடமையென்றால்
நம்மை
மானபங்கப் படுத்திய
அந்த
மனிதப் பதர்களை
முட்புதர்களை
வேரோடு சாய்ப்போம்.
உன்னைக் காக்க,
என்னைக் காக்க,
தன்னை இழந்து
தன் உரிமை இழந்து
சிறை சென்றார்;
செம்மல் ஆகினார்,

மக்களைக் காத்த
மன்றத் தியாகிகளே!
உழைக்கும் மக்களை
ஓரணி திரட்டி,
உரிமைக்காகப் போராடும்
உங்கள் உணர்வை
உலகம் போற்றும்;
உலகம் உய்யும்.



# நீதியோடு போராட்டம்

**இ**லங்கைத் தமிழர்கள் பதிவு செய்ய வேண்டும் என்ற ஆணையை தப்பாக புரிந்துக் கொண்ட அதிகாரிகள் தாயகம் திரும்பிய தமிழர்களையும் கொடுமை செய்தார்கள் அல்லவா? இதனை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. கொடைக்கானலைச் சேர்ந்த காளிமுத்து என்ற தாயகம் திரும்பிய இந்தியர் இந்த ரிட் மனுவை தாக்கல் செய்திருந்தார். மன்றத்தின் சார்பாக அவரைச் சந்தித்த திரு. செல்வராஜ் அவர்களுடன் திரு. காளிமுத்து, நீதியோடு தான் நடத்திய போராட்டத்தை சோகம் நிறைய பகிர்ந்து கொண்டார். அவற்றைக் கீழே தொகுத்துத் தருகிறோம்:

''இலங்கை அகதிகள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என தலைமைச் செயலகத்தின் உத்தரவு வந்தபோது நாங்கள் இதைக் கண்டு கொள்ளவே இல்லை. காரணம், அரசு ஆணைப்படி 1983ம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்திற்கு வந்த அகதிகளை மாத்திரம் தான் இது குறிக்கும் ஆகவே, எமக்கு தெரிந்த தாயகம் திரும்பிய மக்கள் அனைவரையும் பதியவேண்டாம் எனச் சொன்னோம். அரசின் கெடு முடிந்த பிறகு காவல் துறையினர் தாயகம் திரும்பிய மக்களை தூரத்திப் பிடிக்க ஆரம்பித்து விட்டனர்''.

---

''இது எமது தன்மானப் பிரச்சினை; கடைசிவரை இதை விடக்கூடாது என முடிவு செய்தோம்''

''இந்தப் பிரச்சினையை யாரும் புரிந்து கொண்டதாக தெரியவில்லை யாரையெல்லாம் நம்பினோமோ எல்லோரும் கையை விரித்து விட்டார்கள்''

---

''அப்போது நாம் ஆர்.டி.ஓ., எஸ்.பி, டி.ஜி.பி., தலைமைச் செயலர், மறுவாழ்வுத்துறை இயக்குனர், மற்றும் சில அரசியல் தலைவர்களை நேரடியாகச் சந்தித்துப் பிரச்சினையைக் கூறினோம், ஆனால் இந்த பிரச்சினையை யாரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. எல்லோருமே நீங்களும்தான் பதிய வேண்டும் எனக் குறிப்பிட்டனர். இது எமது தன்மானப் பிரச்சினை. ஆகவே கடைசிவரை இதை விடக்கூடாது என முடிவு செய்தோம். இதற்குப் பிறகுதான் நீதிமன்றம் சென்றோம்''.

''நீதி மன்றத்தில் சாதாரணமாக வழக்குத் தொடர முடியவில்லை. இலங்கையோடு சம்மந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால் வழக்கறிஞர்கள் இந்த வழக்கை எடுத்து நடத்தப் பயந்து ஓடினார்கள். நாங்கள் யாரையெல்லாம் நம்பினோமோ எல்லோருமே கையை விரித்து விட்டார்கள்''.

''கடைசியாக வழக்கறிஞர் திரு. கலைமணி அவர்கள் தான் முன் வந்தார்கள். இவர் சமூக ஈடுபாடு கொண்டவர்; தாயகம் திரும்பியோர் பிரச்சினையைத் தெளிவாகத் தெரிந்தவருங்கூட. உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தவுடன் காவல் துறையினர் எனக்குத் தொடர்பில்லாத வினாக்களை எழுப்பி என்னை குழப்ப முயற்சி செய்தார்கள். என்னை மனோரீதியாக தளர்வடையச் செய்வதற்கு அவ்வாறு செய்கிறார்கள். என்பதைப் புரிந்துகொண்ட நான், எது நடந்தாலும் விடப்போவதில்லை என்று எனக்குள் உறுதி கொண்டேன்.''

''டிவிசன் பெஞ்சின் அப்பீல் மனுவை விசாரித்த நீதிபதிகள் கீழ்க்கோர்ட் அளித்த தீர்ப்பை ரத்து செய்ததோடு தாயகம் திரும்பிய தமிழர்கள் பதிவு செய்ய வேண்டியதில்லை என்று நீதியும் வழங்கினர். இந்தத் தீர்ப்பைக் கேட்டவுடனேயே எனக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகியது. நீதியின்பால் நான் நடத்திய போராட்டம் என்பதால் நெஞ்சு நிமிர்ந்து கொடைக்கானல் வீதிகளில் கால் வைத்தேன்.''

''இந்தத் தீர்ப்புக்குப் பிறகுதான் கொடைக்கானல் காவல் துறையினர் தாயகம் திரும்பிய மக்களை மிரட்டுவதை நிறுத்தினார்கள். தமிழ்நாட்டின் ஏனையப் பகுதிகளிலும் இதுபோன்று நடந்திருப்பதை அறிந்து வேதனையடைகிறேன். குறிப்பாக நீலகிரியில் ம.ம.ம. மன்றத்தினர் இதற்காக சிறை செல்ல நேர்ந்ததை பெருமையாக போற்றுகிறேன்.''

---

''இந்தப் பிரச்சினை இத்தோடு முடிந்துவிட்டது என நினைத்தால் அது தவறாகும். ஏனெனில், இன்னும் பல ஆண்டுகளுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினைதான் தமிழகத்தின் அரசியலில் பிரதான பங்கு வகிக்கப் போகிறது. இதில் நமது தாயகம் திரும்பிய மக்கள் பாதிக்கப்படுவது நிச்சயம். ஆகவே, எதிர்காலத்தில் நமது உரிமைகளை பாதுகாக்க ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம்''.

**பேட்டி : கோடை செல்வா**

---

''இந்த நாட்டிலே சாதிதான் மக்களுக்கு பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம்; மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கருவிஷம்; முடக்கு நோயை புகுத்திவிட்ட முள்; எனவேதான், பேதமற்ற சமுதாயத்தை-சமதர்மத்தை-சமத்துவத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் சாதி தொலைந்தாகவேண்டும்''

-அறிஞர் அண்ணா.-

# நீலகிரியில்
## மண்சரிவு, மரணம், வெள்ளம்

நீலகிரி மாவட்டத்தில் அண்மையில் பெய்த பெருமழையின் காரணமாக நூற்றுக் கணக்கான குடிசைகள் இடிந்து போயின. இதுவரை மொத்தம் பதினோரு பேர் மாண்டுபோயினர். கோத்தகிரி, கீழ்கைத்தலா குடியிருப்பில் நைனா, அமராவதி, சத்திய செல்வி, தமிழ்க்குடிமகன் ஆகியோர் அடங்கிய முழுக் குடும்பமே மாண்டு போனது.

## இது இயற்கையின் இன்னலா?

டானிங்டன் குப்பத்தில் 35 குடிசைகள் முற்றிலும் இடிந்து போயின. 160 குடும்பத்தவர்கள் இருக்க இடமின்றி கோத்தகிரி புயல் பாதுகாப்பு மையத்தில் அகதிகளாக வந்து சேர்ந்துள்ளனர்.

## அரசியற் கட்சிகள், மன்றம் கண்டனம்

நிலைமை இவ்வளவு கடுமையாக இருந்தும் அதிகாரிகளின் சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் ஆமை வேகத்திலேயே உள்ளன. புயல் பாதுகாப்பு மையத்திலுள்ள மக்களுக்கு உணவு கூட சரிவர வழங்கப்படவில்லை நல்லெண்ணம் கொண்ட சில தனிநபர்களும் தொண்டு அமைப்புகளுமே அவ்வப்போது உணவளித்து வருகின்றன. மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் புயல் பாதுகாப்பு மையத்தில் தங்கியுள்ளவர்களுக்கு ஒரு நாள் உணவை நிவாரணமாக வழங்கியது.

அதிகாரிகளின் இந்த போக்கை கண்டித்து நீலகிரி மாவட்ட தி.மு.க., இந்திய கம்யுனிஸ்ட் கட்சி, மார்க்ஸிய கம்யுனிஸ்ட் கட்சி மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் என்பன கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

அவ்வறிக்கையில், ''இது போன்ற காலகட்டங்களில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அரசு நிர்வாகம் இதனைச் சிறிதும் கண்டுகொள்ளாதிருப்பதும், அமைச்சர்களே வந்து பார்வையிட வேண்டிய அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ள இம்மக்களை மாவட்ட ஆட்சியரோ, கோட்டாட்சியரோ கூட நேரில் சந்திக்காமை குறித்தும் வேதனையும் கண்டனமும் தெரிவித்துக் கொள்கிறோம். உடனடியாக இம்மக்களுக்கு நிவாரணம் வழங்குவதோடு, நிலையான மாற்று இடத்தை நகர எல்லைக்குள் வழங்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்'' என்று கூறப்பட்டுள்ளது.

தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கவேல் இ. கம். கட்சி மாவட்ட செயலர் திரு. ஏ. பெள்ளி, மா.க.கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் திரு. எஸ்.சின்னதுரை, ம.ம.ம. மன்ற பிராந்திய செயலர் திரு. பி. செபாஸ்தியன் ஆகியோர் இக் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் வெள்ளம், மண்சரிவினால் அழிவு ஏற்பட்டு வருகிறது கண்கூடு இதனை இயற்கை அழிவு என்று சாமாதானம் கூறிக்கொள்வதும் கை விரித்து விடுவதுமே வழக்கமாக உள்ளது. உண்மையில் இது இயற்கை அழிவா?.

அப்படியென்றால், அந்த இயற்கையினால் பணக்காரர்களுக்கு மட்டும் ஏன் பாதிப்பு வருவதில்லை? எப்போதுமே ஏழைமக்களான குடிசைவாசிகள் தாம் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். கொல்லப்படுகிறார்கள். ஏழைமக்களுக்கு சரியான பாதுகாப்பான வீட்டு வசதியை ஏற்படுத்தித் தராததும் மண்-பாதுகாப்பு நடவடிக்கைகள் சரிவர மேற்கொள்ளாமையுமே இதற்குக் காரணமாகும்.

எனவே, இதுபோன்ற மரணங்களுக்கும் அழிவுகளுக்கும் இயற்கை மட்டுமே காரணமல்ல ஏழைகளை ஏழைகளாகவே வைத்திருக்கும் - அவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் கூட மறுக்கப்பட்டிருக்கும்-ஏழை மக்கள் மீது அக்கறை காட்ட மறுக்கும்-இன்றைய அதிகார வர்க்கமும் சமுதாய அமைப்புமே உண்மையான காரணமாகும்.

# ஒலியலைகள்

'மக்கள் மன்றம்' இதழைப் படித்தேன். அது மக்களின் அவஸ்தைகளை வெளிப்படுத்தும் உண்மையான ஒரு பத்திரிகையாக உள்ளது. உங்கள் பத்திரிகை எங்கள் பணியாளர்களுக்கு ஊக்கமூட்டும்.

தே. தேவகி
செயலர்-சமுதாய முன்னேற்ற பணிச்சங்கம்
கீழம் பாக்கம்,
எம். ஜி. ஆர். மாவட்டம்.

தாயகம் திரும்பிய மக்கள் அரசின் முறைகேடான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டதை எதிர்த்து, நீங்கள் எடுத்த நடவடிக்கைகளையும் இதற்காக சிறை சென்று வந்ததையும் அறிந்து மகிழ்கிறேன். பாராட்டுகிறேன். 'மக்கள் மன்றம்' தாயகம் திரும்பியோரின் உரிமைக் குரலாக வரும் அதே வேளையில், சிறு கட்டுரைகளையும் இளைஞர்களின் படைப்புகளையும் வெளியிடுமாயின் பயனுள்ளதாயிருக்கும்.

-ஆ. இராமச்சந்திரன்
ஈரோடு.

இதழின் ஒவ்வொரு வரியையும் படித்தேன். பெண்கள் நலம், மலையக மக்களின் நல்வாழ்வு தாயகம் திரும்பிய இந்தியர்கள் பற்றி ஆழமான கவனத்தோடு செயல்படும் தங்கள் இதழைப் பாராட்டுகிறேன். தங்களின் இதழ் எனது சிற்றிதழ்கள் தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

-பொள்ளாச்சி நசன்.

இந்திய அதிகாரிகளை கேலி செய்யும் இலங்கை நாளிதழ்' என்ற செய்திகண்டு நாணித் தலைகுனிந்தேன். இந்திய தேசியச் சின்னங்களைக் கூட அடையாளம் காணத்தெரியாத நமது அதிகாரிகளை, அன்னிய நாட்டின் பத்திரிகை கேலி செய்திருப்பது இந்தியர் ஒவ்வொருவரையும் கேலி செய்வதற்கு ஒப்பாகும். இதுபோன்ற தவறுகள் செய்த அதிகாரிகள் மீது, 'தேசிய சின்னங்களை அவமானப்படுத்திய குற்றத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

-என். ரவீந்திரன்
கோவை-27.

வெளியீடு : மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம், இல. 187, இராஜா அண்ணாமலைத் தெரு, தபால் பெட்டி எண். 2758 கோவை 641 011. [தனிச்சுற்றுக்கு மட்டும்]